342

சிவமயம்



# திருநீற்றின் மகிமை.

காளையார்கோவில்
ராம. மு. மெய்ப்பொருள் நாயனார் மடம்
ஈரோடு, அனா. அரு. பாங்கி ஏஜண்டு,
முத்தையா செட்டியார்
விருப்பத்தின்படி

தேவகோட்டை, எஸ்டேட் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

1919.

உ

சிவமயம்.

24 JUL 1919
MADRAS
611
27-4-30



# திருநீற்றின் மகிமை.

ஞானைக்கன்றை புமையாள் திருமகனைப்
போனைக்கற்பகத்தைப் பேணினால்—வாராத
புத்திவரும் வித்தைவரும் புத்திரசம்பத்துவரும்
சத்திதருஞ் சித்திதருந்தான்.

மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

ஆற்றலடல் விடையேறுமாலவாயான் திருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னனுடலுற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

பத்தியொடு சிவசியவென்று திருநீற்றைப்
  பரிந்து கையாலெடுத்து
பாரினில்விழாதபடி அன்றுக்குச்செவியொடு
  பருத்தபுஜமீதிலொழுக
நித்தமுவிரல்களாற்றெற்றியில் அழுந்தவுற
  நினைவாய்த்தரிப்பவர்க்கு
நீடுவினையணுகாது தேகபரிசுத்தமாம்
  நீங்காமலேவனக்கே
சத்தியொடுநித்தம்விளையாவென்முகத்திலே
  தாண்டவஞ்செய்யுந்திரு
சஞ்சலம்வராதபாதநிபுத்தமுமிவாரவே
  சத்தியுஞ்சிவமென்னவாம்
மத்தினிய மேருவென வைத்தமுதினைக் கடையு
  மான்மருகனென முருகா
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு
  மலைமேவுகுமரேசனே.

பிரமோத்திரகாண்டத்தில் நைமிசாரணிய முனிவர்களுக்கு வேதமுதலான சாஸ்திரங்களுணர்ந்த சூதமுனிவர் விபூதியின் பெருமையைச் சொல்லுகிறார்.

எப்போதும் உயிர்க்கொலை செய்கின்ற கொடிய தொழிலையுடைய பாதகரேயானாலும் முதன்மையாகிய இந்தச்சரிதையைக் கேட்குந்தன்மை

வர்கள் தொடர்ந்து வருகின்ற பிறவியும் மும்மலமும் நீங்கி அகிலவந்திருக்கும்படி சிவபதமாகிய முத்தியை அடைவார்கள்.

பரமசிவத்தை அன்பினால் ஆராதிக்கும் மனமுடையவரும் அக்கினிதேவனும் முனிவர்களும் புகழும்படியான வாமதேவனென்னும் முனிபுங்கவர், மோட்சத்தில் கருத்தை வைத்திருப்பவர் உலகப்பற்றை விட்டவர் விபூதியே பூஷணமாகத் தரித்துக்கொண்டுவிளங்கும் திருமேனியர்; பாரத்த சடையையுடையவர்; மரவுரி தரிப்பவர்; வெண்கபாலந்தரித்தகையர்; இவ்வுலகினர்க்கு இனிய அருள்மொழியும் சாந்த குணத்தினால் விரைவாக தேசமெங்குஞ் சஞ்சரிக்கும் பாதத்தையுடையவர். ஒருநாள் உலகத்தார் புகழும் அன்றில் வனத்தை யடைந்தார். அடைந்த அளவில் மேலே ஒத்த பற்களும் அகன்ற வாயுமுள்ளவனும் கருநாகத்தை அரைக்கணிந்தவனும் சற்பகங்கணத்தையுடையவனும் அதுபோல் மேலெரிட்ட புருவமுடையவனும் பெரிய மலையின் குகைபோல் ஆழ்ந்த வாயினையுடையவனும் இரண்டு பிறையை வைத்திருப்பது போன்று பிணங்கள் நாரிக்கொண்டிருக்கும் பற்களால் மென்று அரக்கிக்கொண்டிருக்கும் உதட்டினையுடையவனும் நெருப்புக்குச் சமானமான கண்களையுடையவனும் வடவாமுகாக்கினிபோல் கொழுந்துவிட்டெரியும் செவந்த செம்பயி

ணையுடையவனும் இடிபோல் குரலோசையோடு சிரிப்பவனும் வஞ்சகத்தையுடையவனுமாகிய ஒரு ராக்கதன் வாமதேவ முனிவரைக் கொல்ல மனதில் கோபங்கொண்டு நீ போகாதே நில்லு நில்லு வென்று சொல்லிக் கொடிய கோபத்துடன் பிடித்துக்கொண்டு தன் கைகளால் இருக்கினான். பனை போல் நீண்ட கைகளால் தழுவியிறுக்கவும் பரிசுத்தராகிய அம்முனிவர் தோள்களில் பூசியிருக்கும் விபூதியானது அவன் சரீரத்தில் பட்டதினுலும் அம்முனிவர் திருமேனியைப் பரிசித்ததினுலும் அக்கொடிய ராக்கதனுடைய பயங்கரமான ரூபமும் பாபமுந் தொலையவே மன்மதன்போல சௌந்தர்யமுள்ள சரீரத்துடன் நின்றான். தன் உருவம் மறைந்தவுடனே அவனுக்குத் தாகமும் பசியுந் தீயகுணமும் தொலைந்து இப்போது பாவங்கள் தொலையும்படி பூர்வ ஜென்மத்தில் கொஞ்சம் புண்ணியஞ் செய்தவனான அவன் மனதினால் தன் உண்மை நிலையையறிந்து வாமதேவ முனிவரை வணங்கி சுவாமி எப்போதும் மாறாமலிருக்கும் பசியுடன் இந்த காட்டில் வருந்தினேன். ஒப்பில்லாத தவசிரேஷ்டரே தங்கள் திருமேனி பரிசத்தால் ராக்கத உருவமும் பசியும் கொலைத் தொழிலும் நீங்கி நல்ல உருவத்தையடைந்தேன். தங்கள் கண்களால் என்னைப் பார்க்கும்படி பெற்றநாயடியேன், இயல்பாகவே பற்ற

ற குணத்தையுடைய பரமசிவன் வாழ்கின்ற பதி யைப் பெறவும் இவ்வுலகப் பிறவிப்பிணி நீங்கவும் என்னை ரக்ஷிப்பது தேவரீர் கடமையாமென்று வேண்டுகிறேன். வாமதேவர் கிருபையும் சந்தோ ஷமுமாகி அவனைப் பார்த்து ஓ காட்டில் திரிந்து கொடிய கொலைசெய்யும் ராக்ஷதனே! நீ யாவன்? இவ்விடம் வந்த காரணமென்ன? ராக்ஷத ரூபமெ டுக்கும்படி என்ன பாவத்தை இயற்றினாய்? என்று கேட்டார். என் ஐயனே! உங்கள் கிருபை பெற் றதினால் ஏழு பிறப்பும் அறிந்தேன்; நான் அந்த வரலாற்றை யெல்லாம் சொல்லுகிறேன் [illegible] முன்னே சம்பவித்ததையும் இவ்வுடலில் வந்ததை யும் ஒளியாமல் சொல்லுகிறேன். [illegible]ரூபாகிய இந்த ஜென்மத்துக்கு முன் இருபத்தைந்தாம் பிறவியில் இவ்வுலகம்புகழ அச்சயனென்னும் ராஜனாய்க் கொ டுமையான பாவங்கள்செய்யும் மிலேச்சர்களுக்கு இறைவனாகி இக்கொடுமைகளை செய்துகொண்டிருந் தேன், உலகம் வருந்தக்கொடுங்கோன்மை செலுத்தினேன். மயில்போலும் சாயலுடைய அழகிய பெண்களை விவாகம் செய்து அவர்களை ஒருநாள் புணர்ந்து பலமான சிறையில் காவற்படு த்தினேன். விவாகம் செய்தபோது அவர்களைப் புணர்ந்ததேயொழிய மறுபடி அவர்களைப் பார்த் திலேன். நான்கு வருணத்திலுள்ள அனந்தங்கோடி மாதர்களையும் பிரம்மசிருஷ்டியிலடங்கிய பலஜாதி

மாதர்களையும் விவாகம் செய்ததேயல்லது காம
பிருதியால் எனக்குண்டாகிய ஆசை நீங்கவே
இல்லை. காமமென்னும் நோய் பொருந்திய நெஞ்
சில் அறிவை வைப்பதில்லை. மந்திரிகள் சொல்லைக்
கேட்பதில்லை. அரசாட்சி இத்தன்மையானதென்று
சிறிதும் விசாரித்தறியேன். நான் பெற்ற புத்திரர்
களும் இகழும்படியான நோய்கொண்டு இறந்
தேன். காலதூதர்கள் பாசத்தாலிறுக்கி இரும்பினு
லாகிய தூண்டில் முள்ளை என் கோசத்தில் இரு
க்கி இழுத்துக்கொண்டுபோய் எமதருமன் முன்
விட்டார்கள். அவர் காலதூதர்களை விளித்து அழ
கிய வஸ்திரமணிந்த தன் மனைவியர்களைப்புணராது
சிறையில் வைத்த பாவியும் பொய்யொழுக்கமுள்
ளவனுமாகிய இவனை இந்திரியக்குழம்பு நிறைந்த
நரகத்தில் தள்ளுங்களென்று கோபத்தோடு சொ
ன்னார். அவ்விதம் எமபடர்கள் செய்ய அதில் மூப்
பதினாயிர வருடம் நாறுகின்ற இந்திரியத்தை
விலாப்புடைக்க குடித்து துன்புற்றேன். கெட்ட
அந்த நரகத்தை விட்டு நீங்கி ஒரு கோடி ஆன்
ரூபி பொருந்திய பழி பாவந் தங்கிய பேயுருவங்
கொண்டு காட்டில் நீங்காமல் நாறு தேவவருஷம்
அலைந்து தீப்பொறியைச் சொரிகின்ற கொலைத்
தொழிலையுடைய புலியாகப் பிறந்தேன். பாம்பா
கவும் செந்நாயாகவும் பன்றியாகவும் பச்சோந்தி
யாகவும் நாயாகவும் பிறந்தேன். நரியாய் மூப்

லாய் மானாய்க் குரங்காய் பருந்தாய் ஓரியாய் காக்கையாயும் கரடியாயும் கோழியாயும் பாவமுள்ள கழுதையாயும் பூனையாயுந் தவளையாயும் ஆமையாயும் பிறந்தேன். வலி பொருந்திய மீன் ஆனேன். பெருச்சாளியுமானேன். கோட்டானுமானேன். மதநீர் ஒழுகும் யானையுமானேன். இருபத்தைந்தாம் பிறப்பில் இவ்வனத்திலிராக்கதனானேன். இவ்வனத்தில் பல பக்ஷிகளை மிருகங்களை மனிதர்களைப் பிடித்துக்கொன்று மாம்சங்களைத் தின்றும் வருத்தத்தைத் தருகிற பசியடங்காமல் துன்பங் கொண்டிருந்தேன். அமிர்த மழை பொழியும் மேகம் போல் தங்களைக் கண்டேன். கண்டவுடன் முன்னிருந்த அபாயத்தைக் காணேன் சுவாமிகளே! நான் எடுத்த சரீரம் அநேகம். அதில் கொடிய பாவங்களைச் செய்தேனேயல்லது புண்ணியம் செய்தறியேன். தேவரீரை தரிசித்து நல்லவுருவத்தையடைந்தேன். இப்படியாக என்ன புண்ணியம் செய்திருக்கிறேன் என்று கேட்க வாமதேவ மகரிஷி சொல்லுகிறார். முன்னொருநாள் இக்கானகத்தில் ஓடிவந்து என்னை உன் கைகளால் கட்டிப் பிடித்தபோது என் சரீரத்தில் அழகுள்ளதாயிருந்த திருநீறானது உன்மேற்பட்டது அதனால் உன் பாவம் நீங்கிவிட்டது. பிணிகள் இல்லாத திவ்ய சரீரத்தையுடைய தேவனாய் நின்றனை. பார்வதி பாகனாகிய பரமசிவத்தினையுடைய திருநீற்றின்

பெருமை முழுவதும் பரிசுத்தனான பிரமதேவ
னும் மகாவிஷ்ணுவும் நிச்சயித்து அறியக்கூடாத
தன்மையையுடையதென்றால் வெவ்வேறு தேகம்
எடுத்தும் பிறந்து உழலுகிற மனிதர்களோ அறி
வார்கள்? அரிதாகுனுந் திருநீற்றின் பெருமை
யைச் சிறிது சொல்லுகிறேனென்று சொல்லு
கிறார். பாண்டிநாட்டில் கொடிய செய்கையை
யுடைய பிராமணன் ஒருவன் இருந்தான். இவன்
பாவமும் பழியும் சம்பாதித்து ஒழுக்கத்தினு
மாறுபட்டு பிராமணத் தன்மையை விட்டுவிட்டு
பொய் சொல்லல் சூதாடல் இழிவான செய்கை
யென்கிற திருட்டினுலும் சம்பாதித்து வேசையர்
களுக்குக் கொடுத்து காமத்திலாழ்ந்து நிறையழி
ந்து ஒருநாள் பாதிசாமத்தில் ஊனையே புசிக்
கும் நீசன் ஒருவனுடைய வீட்டிற்சென்று அவன் மனை
யாளைச் சோரத்தனமாகப் புணரும்போது நீசன்
கண்டு அடித்துக்கொன்று தூக்கி எறிந்துவிட்
டான். வேறொரு பிணத்தைத் தின்னவென்று சாம்
பல் மீது படிந்த ஒரு நாயானது இந்தப் பிணத்
தைப் பிடுங்கித் தின்னுகையில் யமபடர்கள் இறந்
தவனைப் பிடித்து நரகத்தில் தள்ளும்போது பரம
சிவனுடைய கணங்கள் கண்டு யமதூதர்களைத்
தண்டித்து இந்தப் பிராமணனை விமானத்தில் வை
த்துக்கொண்டு போகும்போது யமதருமன் எதி
த்து வேறான தருமம் ஒன்றும் செய்யாதவனைப்

பரமசிவத்தினிடம் விடுப்பதற்குண்டான காரணம்
என்ன சொல்லுங்களென்று கேட்க சிவதூதர்
கள் இவனுடைய சரீரத்தில் விபூதி நிறமுள்ள
சாம்பல் சுணங்கின் காலிலிருந்து படிந்தபடியால்
பரமசிவன் ஆக்கினைப்படி கொண்டுபோவதாகச்
சொல்லிக்கொண்டுபோய்ச் சிவலோகத்தில் சேர்த்
தார்கள். ஆனதால் ராக்கத அண்ணலே திருநீற்
றின் பெருமை சொல்லுவதற் கெளிதானதல்ல.
பொல்லாத உருவமெடுத்து உலகில் நீங்காத துன்
பம் அடைகின்ற புத்திபூர்வமான பாவிகளேயானு
லும் விபூதியைத் தொட்டமாத்திரத்தில் புனிதர்
களாய் பொன்னுலகம் அடைவார்கள். மந்திரமலை
யின் சிகரத்தை ஒத்திருக்கிற அழகிய புயமுள்ள
அரக்கனே அந்த விபூதியை நாளும் சிவனடியார்
கள் தரித்துக்கொண்டிருப்பதுபோல இந்தச் சரீர
முழுதும் பால் நிகராய் விளங்கும்படி தரித்துக்
கொண்டிருக்கிறேன் என்று மனதில்கிருபையுள்ள
வாமதேவமுனிவர் சொன்னார். சுவாமிகளே அடி
யேன் நிருபனாகயிருந்தபோது விளைபூமியையும்
தோப்புகளையும் தானம் செய்த பெருமையால்
இருபத்தி ஐந்தாம் பிறவியில் ஒரு சிவயோகியால்
அனுக்கிரகம் பெறுவாயென்று எமதருமராஜன்
சொன்னபடி நிறைவேறிற்று என்று திரிபுண்டர
மகத்துவத்தை சொல்லக்கேட்டு சிவசாயுச்சியம்
பெற்றான். விபூதிசாதனபெருமை நரகத்தை தவிர்

க்கக்கூடியதானதால் முனிபுங்கவர்களே கேளுங்க ளென்று சொல்லுகின்றார் சூதபுராணிகர்.

ஆதலால் இவ்வினைச் செல்வர்களாகிய யாவரும் மகாவிபூதிப்பிரசாதமாகிய திருநீற்றை அன்புடனே எப்பொழுதும் மறவாமல் தரித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

அரியது கேட்கின் வரிவடிவேலோய்
அரிது அரிது மானிடராதலரிது
மானிடராயினுங் கூன் குருடு செவிடு
பேடுநீங்கிப் பிறத்தலரிது
பேடுநீங்கிப் பிறந்தகாலையும்
ஞானமுங் கல்வியு நயத்தலரிது
ஞானமுங் கல்வியு நயந்தகாலையும்
தானமுந் தவமுந்தான் செயலரிது
தானமுந் தவமுந்தான் செய்வாராயின்
வானவர்நாடு வழிதிறந்திடுமே.

மண்ணினிற்பிறந்தார் பெறும்பயன் மதிசூடு
மண்ணலாரடியார்தமை யமுதுசெய்வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப்பொலிவு கண்டார்த
லுண்மையா மெனி லுலகர் முன்வருகென வுரைப்பார்
சைவமது தழைத்தோங்கச் சமண் முதலாம்பற் றகலத்
தெய்வநெறித் தமிழ்பாடுந் திருஞான சம்பந்தர்
மெய்ம்மைவளர் வாகீசர் வித்தகராம் வன்றொண்டர்
செய்வளருந் திருவாதவூரர் திருத்தாள்போற்றி

திருச்சிற்றம்பலம்.

---